


பூநகரி மறவ குறிச்சியைப் பிறப்பிடமாகவும்,
வவுனியா சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட
வீர செங்குந்த மரபில் உதித்த நந்திகோத்திரருமான

# அமரர்

# திரு. தம்பு கந்தையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 22.10.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் கணபதி துணை



பூநகரி மறவ குறிச்சியைப் பிறப்பிடமாகவும்,
வவுனியா சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட
வீர செங்குந்த மரபில் உதித்த நந்திகோத்திருமான

**அமரர்**

# திரு. தம்பு கந்தையா

அவர்களின்

**சிவபதப்பேறு குறித்த**

# நினைவு மலர்

## 22.10.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் குலவிளக்காய்
குன்றாத ஒளிவிளக்காய்
அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பாலே மனம் நிறைய
அமைதியான உருவம் கண்டு
நல்லியல்பே பெரிதமைய
நலமெல்லாம் தருவித்து
பாரினில் எம்மைப்
பண்புடன் வாழவைத்து
சிறப்பாக எமைவளர்த்து
சிவனடி சேர்ந்துவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

மண்ணில்
05
-
03
-
1937

விண்ணில்
07
-
10
-
2011



அமரர்.

# உயர்திரு. தம்பு கந்தையா

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு கரவருடம் கந்தையா என்னும் நல்லான்
பூண்ட புரட்டாதி வளர்பிறை ஏகாதசித் திதியதனில்
வேண்டிய நிறைவுபெற்று நிறைகுணத்தான்
வெள்ளிக்கிழமை ஏழாம்நாள் வேலவன் சரண்புகுந்தநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

வளம்பல நிறைந்த கிளிநொச்சியதனில்
பூநகரி மறவ குறிச்சிக் கிராமத்தில்
பண்பில் உயர்ந்து விளங்கிய
தம்புவிற்கும் செல்லமுத்துவிற்கும்
தரணியை ஆண்டிடத்
தங்கமான ஏழு குழந்தைகள் பிறந்தனர்.
தில்லைநாயகி, கணபதிப்பிள்ளை,
கந்தையா, சிதம்பரம், திசநாதன்,
இரத்தினசிங்கம், வேலாயுதம்
எழுவரில் மூன்றாமவராய்
தாது வருடம் பங்குனித் திங்கள் ஐந்தாம் நாள்
இப்புவி தன்னில் வந்துதித்தார்.
தொழில் நிமித்தம் உறவுகளின் பாசப்பிணைப்பாய்
வளம்பல நிறைந்த வவுனியாவில்
குடியேறிக் கொண்டார்.
பெரும்தெருக்கள் திணைக்களத்தில்
சிறந்த சாரதியாக எட்டு ஆண்டுகள்
கடமையைக் கச்சிதமாய்ச் செய்து
05.03.1963 இல் சுந்தரம் சின்னம்மாவின்
சிரேஷ்ட புத்திரியாம் சிவபாக்கியத்தை கரம்பிடித்து
கந்தையாவும், சிவபாக்கியமும்
இல்லறமாம் நல்லறத்தை இனிதே
நடத்திவரும் நாளில் வாழ்க்கையை மிளிரவைக்க
வசந்தா இப்புவியில் வந்துதித்தார்
வாழ்வின் பயன் மேலும் மிளிரவென
சிறிதரனும், சிறிகாந்தனும் பெற்றவரும்
உற்றவரும் மகிழும்படி இப்புவியில் வந்துதித்தனர்
இவர்கள் இனிதே வளர்ந்து வரும் நாளில்
வளர்மதியும், சிறிரஞ்சனும் இப்புவிதனில் வந்துதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வளர்ந்துவரும் வேளையில்
தன்னையே மறந்து பூரித்து நின்றார்.
முத்தாக வளர்ந்து வந்த வசந்தா
கல்வியில் சிறந்து ஆசிரியரானார்.
இவரிற்கு தங்கை மகனான
இரவீந்திரனை கரம்பிடித்துக் கொண்டுத்தார்.
தொடர்ந்து சிறிதரனிற்கு வாசுகியும்,
சிறிகாந்தனிற்கு பவானியும், வளர்மதிக்கு கிருஷ்ணகுமாரும்
சிறிரஞ்சனிற்கு பிரியதர்சினியையும்
இல்வாழ்வில் இணையவைத்தார்.
அவர் தம்வாழ்வில் சிறப்படைய வழியும் காட்டினார்.
பிள்ளைகளின் பிரியமான வாழ்வில்
கிவிஷன், கிஷான், கிதுஷா,
சாகித்தியன், சக்திகா, சதுஷா, அபிநயன்,
பிரித்திகா என எட்டு பேரக்குழந்தைகளையும்
மிக்க பாசத்துடனும்
கனிவான கண்டிப்புடனும் வழிகாட்டி மகிழ்வடைந்தார்.
இந்தவேளையில் தீராத நோய் பற்றிக் கொண்டது
இந்த செய்தி கேட்டு லண்டமாநகரில்
வசித்த பிள்ளைகளிருவரும் கதிகலங்கினர்.
தந்தையைக் கண்குளிரவைக்க ஓடோடி வந்து
தம் கடமைகளை இனிதே முடித்துவிட்ட
முத்தான செல்வங்களை கண்குளிரக் கண்டு
தனக்கு தீராத நோய் என்று
இறக்கும் வரை தெரியாது
உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள்
கவலையுற கரவருடம் புரட்டாதி
வெள்ளி ஏழாம் நாள் ஏகாதசி
திதியதனில் பண்பாளன் பரமனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காரிய சித்தி மாலை

திருச்சிற்றம்பலம்

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவர்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறையா கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாங் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பெருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாய் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபகதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும் அப்பொருள்யாவன
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமம் பயன்யாவன
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைக்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணில் ஓர் ஐங் குணமாகி
வதிவான் எவன் நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான்எவன்வான் இடைஒன்றாய்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச அறிவில் பசு அறிவில்
        பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
        பயிலப் பணிக்கும் அவன் யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
        பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
        திகழச் சரணம் அடைகின்றோம்.

இந்த நமது தோத்திரத்தை
        யாவன் மூன்று தினமும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
        சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறுமெண்
        டினமுச் சரிக்கின் சதுர்த்தியடைப்
பந்த மகல ஓரெண்கால்
        படிக்கில் அட்ட சித்திபெறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
        திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
        தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கு முழுவ லால்கிளப்பில்
        பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
        தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார்.

திருச்சிற்றம்பலம்

(இந்த காரிய சித்தி மாலையை காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டு நாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்தி பெறுவர். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டுமுறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

**பண் - தக்கேசி** **சுந்தரர்** **7ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிஔணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வளர்ப் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே.

## திருவாசகம்

**மாணிக்கவாசகர்** **8ம் திருமுறை**

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்து கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்த்து என்னைப் போற்றி
சயசய போற்றி என்றும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பண் - இந்தளம் திருவாலியமுதனார் 9ம் திருமுறை

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம்பலந் தன்னுள்
பொன்னும் மணியும் நிறைந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார் 9ம் திருமுறை

குழல் ஒலி யாழ்ஒலி கூத்துஒலி ஏத்துஒலி
எங்கும் குழாம் பெருகி
விளவு ஒலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திரு ஆரூரின்
மழவிடையார்க்கு வழிவழியாளாய்
மணம் செய்குடிப்பிறந்த
பழ அடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

12ம் திருமுறை

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மையாம் எனின் உலகு முன் வருக என்று உரைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

# காயத்திரி மந்திரம்

ஓம் பூர்புவ ஸ்வா:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநப்ர கோதயாத்.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சகலகலா வல்லி மாலை!

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்
பித் தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே. 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கோ லோ
வுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 04

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்
செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 05

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த
நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பார்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோமதிப் பேடே
சகல சலாவல்லியே. 07

சொல்விற் பனமு மவதான முங்
கவி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள் வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்
சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 08

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே. 09

மண்கண்ட வெண்குடை கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடி
யுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

**முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு**
**என்னின் றருள்செய் எலிவாகனப் பிள்ளாய்**
**சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்**
**எக்குற்றமும் வராமற் கா.**

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளி மகாதேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாய் முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரர் குணம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவன் அவனும்
அம்மா உனை அணைத்தே அருள் மாரி பொழிந்தானே
வகையாற்று படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியறியாத் திகைப் போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப்புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத்தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளும் அம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைய தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைய தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பலவகைத்திரவியங்கள்
நானுனக்கு தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டு விட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகி வரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் கோள் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச்சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப்பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்பைக்கட்டிவிட்டு கடமை முடிந்தென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறும் காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானக் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்கு கையில் லுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக்கண்டால் எரிமலைபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால முணர்வுமுண்டு
எச்சக்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கி வர நல்லறிவு துலங்கிவர
தேவி மகாகாளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

**துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.**

**வெண்பா**

**அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக।
வருக வருக மயிலோன் வருக।
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக।
வாசவன் மருகா வருக வருக।
நேசக் குறமகள் நினைவோன் வருக।
ஆறு முகம்படைத்த ஐயா வருக।
நீறிடும் வேலவன் நித்தம் வருக।
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக।
சரவண பவனார் சடுதியில் வருக।
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக।
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக।
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக।
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு தின்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என் தனை யாளும் ஏரகச் செல்வ।
மைந்தன் வேண்டும் வரம் மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திரு வடியை உறுதிஎன்று எண்ணும்
என்தலை வைத்துஉன் இணையடி காக்க।
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க।
பன்னிரு விழியால் பாலனைக் காக்க।
அடியேன் வசனம் அழகுவேல் காக்க।
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க।
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க।
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க।
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க।
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க।
முப்பத் திருபல் முனைவேல் காக்க।
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க।
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க।
என் இளங் கழுத்தை இனியவேல் காக்க।
மார்பை இரத்ன வடிவேல் காக்க।
சேரிள முலைமார் திருவேல் காக்க।
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க।
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க।
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க।
பழுபதி னாறும் பருவேல் காக்க।
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க।
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க।
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க।
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க।
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க।
வட்டக் குதத்தை வல்வேல் காக்க।
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க।
கணைக்கால் முழந்ததாள் கதிர்வேல் காக்க।
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க।
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க।
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க।
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க।
நாவில் சரஸ்வதி நல்துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க।
முப்பா நாடியை முனைவேல் காக்க।
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி யினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு உடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழ்ஒளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை யுறும் செங்கல்வராஜா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுன் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றள் ஆமே
பிள்ளை என்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனம் மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்த சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தாங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத்து அடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாய் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத் துணித் தகையதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கோளறு திருப்பதிகம்

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது

திருச்சிற்றம்பலம்

**பண் : பியந்தைக்காந்தாரம் 7ம் திருமுறை**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் ரவர்க்கு மிகவே. 01.

என்பொடு கொம்பொடைமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 02.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 03.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 04.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் முருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 05.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 06.

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 07.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 08.

பலபல வெடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளொடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 09.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே. 11.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாள்கள் (தினம்)

**ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனமான சில நாட்கள்**

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 08 | - | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 22 | - | சர்வதேச குடி தண்ணீர் தினம் |
| ஏப்பிரல் | 07 | - | சர்வதேச சுகாதாரத் தினம் |
| ஏப்பிரல் | 23 | - | சர்வதேச புத்தகத் தினம் |

**(இது 1996ல் தான் முதன் முதலாக அறிவிக்கப்பட்டது)**

| | | | |
|---|---|---|---|
| மே | 01 | - | சர்வதேச உழைப்பாளிகள் (தொழிலாளர்) தினம் |
| மே | 08 | - | சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை தினம் |
| மே | 15 | - | சர்வதேச குடும்ப நலன் தினம் |
| மே | 17 | - | சர்வதேச தொடர்பு தினம் |
| மே | 31 | - | சர்வதேச புகையிலை மறுப்பு தினம் |
| யூன் | 05 | - | சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| யூன் | 26 | - | சர்வதேச போதை மருந்து எதிர்ப்புதினம் |
| யூலை | 11 | - | சர்வதேச சனத்தொகை தினம் |
| யூலை | 28 | - | சர்வதேச அகதிகள் தினம் |
| செப்ரெம்பர் | 08 | - | சர்வதேச எழுத்தறிவு படிப்பறிவு நாள் |
| ஒக்டோபர் | 01 | - | சர்வதேச சிறுவர் நாள் |
| ஒக்டோபர் | 02 | - | சர்வதேச வயோதிபர் நாள் |
| ஒக்டோபர் | 06 | - | சர்வதேச ஆசிரியர் நாள் |
| ஒக்டோபர் | 15 | - | சர்வதேச வெள்ளைப்பிரம்பு நாள் |
| ஒக்டோபர் | 16 | - | சர்வதேச உணவு நாள் |
| ஒக்டோபர் | 21 | - | சர்வதேச விவசாய நாள் |
| ஒக்டோபர் | 24 | - | சர்வதேச ஐக்கிய நாடுகள் சபை நாள் |
| டிசம்பர் | 01 | - | சர்வதேச எய்ட்ஸ் நாள் |
| டிசம்பர் | 10 | - | சர்வதேச மனித உரிமைகள் நாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான மூன்று

❖ மதிக்க வேண்டிய மூன்று :-
முதுமையானோர், மார்க்கம், சட்டம்

❖ விரும்பவேண்டிய மூன்று :-
கருணை, நற்குணம், மனஅமைதி

❖. ஒழிக்க வேண்டியது மூன்று :-
திருட்டு, சோம்பல், பொய்

❖ ஆதரிக்க வேண்டியது மூன்று :-
வாக்குறுதி, நட்பு, பண்பு

❖ கட்டாயம் கவனிக்க வேண்டியது மூன்று :-
பேச்சு, நடைமுறை, செயல்கள்

❖ அடக்க வேண்டியது மூன்று :-
நா, வேதனை, சோம்பல்

❖ தவிர்க்க வேண்டியது மூன்று :-
புகைத்தல், மது அருந்துதல், சூதாடல்

❖ போற்ற வேண்டியது மூன்று :-
அறிவு, அழகு, பண்பு

❖ நேசிக்க வேண்டியது மூன்று :-
நேர்மை, தூய்மை, கடினஉழைப்பு

❖ வெறுக்க வேண்டியது மூன்று :-
பெருமை, அநீதி, வாக்குமீறல்

❖ அஞ்ச வேண்டியது மூன்று :-
களவு, கோள், பொய்

❖ பேணி வளர்க்க வேண்டியது :-
திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி

❖ தம்பித்துக் கொள்ள வேண்டியது மூன்று
தீயஎண்ணம், பொறமை, பிடிவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் - ஓர் ஆய்வு

இறைவனானவன் ஓர் உயிரைப் படைக்கும் பொழுது அதற்குரிய இறப்பு நேரத்தையும் குறிக்கின்றான். இதனை எவ்வகையான விஞ்ஞான மருத்துவத்தினாலும் மாற்ற முடியாதுள்ளது.

உயிரின் இறப்பு பல்வகைப்பட்ட நிகழ்வுகள் மூலம் இறைவனால் நிறைவேற்றப்படுகின்றது. அதில் ஒன்று நோய்களை ஏற்படுத்தி இறப்பை அமுல் செய்வதாகும்.

மருத்துவ உலகத்தால் சில நோய்களை குணப்படுத்தி இறப்பை தாமதப்படுத்தலாமேயொழிய இறப்பை நிறுத்த முடியாதுள்ளது. அதாவது சில மருத்துவ சிகிச்சைகளால் ஏற்படும் சிக்கல்கள் (Complicahons) கூட இறப்புக்கு காரணமாகின்றன.

நோய்களில் பலவகைகள் உண்டு. சில மருத்துவத்தினால் எளிதில் குணப்படுத்தக்கூடியதாக உள்ளன. சில நோய்களோ மருந்தினால் முற்றாக குணப்படுத்த முடியாதுள்ளது. அவற்றில் ஒன்று புற்றுநோய் ஆகும்.

புற்றுநோய் (Caner) என்பது உடலிலுள்ள கலங்கள் (Cells) தன்னிச்சையாக (Uncontrol) பல மடங்குகளாக பெருகுவதனால் (Multiplication) ஏற்படுவதாகும். எளிதில் சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ளக்கூடிய புற்றுநோய்க்குரிய காரணங்களை இன்னும் கூற முடியாதுள்ளது.

புற்றுநோயை ஏற்படுத்தும் பொருட்களை Carcinogens என்று ஆங்கிலத்தில் அழைப்பார். இந்த Carcinogens இரசாயனப் பதார்த்தமாகவோ (Chemicals) அல்லது பௌதிகக் காரணிகளாகவோ (Physical) பாரம்பரிய காரணிகளாகவோ (Genetics) இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரசாயனப் பொருட்கள் :-**

1. விளக்கின் கரும்படிவு (Hydro carbon)

2. **பழக்க வழக்கங்கள்**
   1) புகையிலை, பாக்கு, கலந்து வெற்றிலை சாப்பிடுதல் (வெற்றிலை, சுண்ணாம்பு பிரச்சனை இல்லை)

   2) சுருட்டு, பிடி, சிகரெட், புகைத்தல்.

   3) மதுபானம் அருந்துதல் (சிகரெட் உடன் கூடிய)

3. **வேலைத்தளங்களில்**
   1) Asbestos (அஸ்பெஸ்டஸ்) தொழிற்சாலை கூரைத்தகடு

   2) தளபாடப்பூச்சு (Varnish)

**பௌதிகக் காரணிகள் :-**

1) அளவுக்கதிகமான X கதிர்கள்

2) UV Light - Exposure, Fishing, SunBath, Farming

3) கதிர்வீச்சு (Radiation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரம்பரிய காரணிகள்

ஒரு சந்ததியிலிருந்து அடுத்த (Genetice) சந்ததிக்கு கடத்தப்படல்.

உதாரணம் :- மார்பு புற்றுநோய்

**புற்று நோய்க்குரிய அறிகுறிகள் சில**

1) உடலில் அசாதாரண வளர்ச்சி (கட்டிகள்) எல்லா கட்டிகளும் புற்றுநோய் அல்ல சில கட்டிகள் புற்று நோயாக இருக்கலாம்.

2) மூக்கு, வாய், காது, முரசு, குதம் போன்றவற்றில் இரத்தம் கசிதல்.

3) சோர்வு, உடல் மெலிவு.

4) பசியின்மை.

5) நீண்ட நாள் மாறாத புண்கள்.

6) நீண்ட நாள் மெல்லிய காய்ச்சல்.

**புற்றுநோயைக் குணப்படுத்தல்.**

1. புற்றுநோயை 100% குணப்படுத்துதல் என்பது மருத்துவத்தினால் முடியாதுள்ளது. வாழ்க்கைக் காலத்தை 5 வருடங்களாக அல்லது 10 வருடங்களால் கூட்டுவது தான் சாத்தியமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆரம்பத்தில் புற்றுநோயை இனம் கண்டு கொண்டால் வாழ்க்கைக்காலத்தை அதிகரித்துக் கொள்ளலாம். சிகிச்சை அளிப்பதும் இலகுவானதும் ஆகும்.

3. மருத்துவ கிசிச்சை 2 வகைப்படுத்தப்படும்.
   1. வருமுன் தடுத்தல் (Prerention)
   2. வந்த பின் சிகிச்சை அளித்தல் (Curation)

**1) புற்றுநோயை வராது தடுத்தல்**

1. புகையிலை உபயோகிப்பதை நிறுத்தல்.

2. பாக்கு, புகையிலை இல்லாது வெற்றிலை சாப்பிடல் அல்லது வெற்றிலை சாப்பிடும் பழக்கத்தை கைவிடல் அல்லது குறைத்தல்.

3. சுருட்டு, பீடி, சிகரெட் பாவிப்பதை கைவிடல் அல்லது வெகுவாக குறைத்தல்.

4. சிகரெட் உடன் கூடிய மதுபானத்தை கைவிடல் அல்லது மதுபானம் அருந்துவதை கைவிடல் அல்லது குறைத்தல்.

5. புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய மூலப் பொருட்களை கொண்ட தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும்போது கூடிய கவனத்துடன் தற்பாதுகாப்பை மேற்கொள்ளல்.

6. சூரிய ஒளியுடன் கூடிய திறந்த வெளிகளில் அல்லது கடலில் வேலை செய்பவர்கள், சூரிய ஒளியின் அதிகூடிய தாக்கத்தை (Exposux) தடுத்தல். உதாரணமாக ஆடை அணிதல், உடலில் பூச்சு பூசுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எயிட்ஸ் (AIDS) போன்ற நோய்கள் வராமல் தடுத்தல் உதாரணம் - பாதுகாப்பான உடலுறவு.

8. பாரம்பரியம் சம்பந்தமான ஆலோசனை (Genetic Councelling) பாரம்பரிய காரணங்களால் வரும் புற்றுநோயை தடுக்கலாம்.

**2) புற்றுநோய் வந்தபின் சிகிச்சை (Curatre Treatment)**

A. சத்திர சிகிச்சை (Surgery)
   1. புற்றுநோய் ஏற்பட்ட இடங்களை வெட்டி அகற்றல்.
   2. அந்த இடங்களை மறுசீரமைத்தல் (Construction)

B. கதிர்வீச்சு (Radiation) கதிர் வீச்சினால் புற்று நோய் இடங்களை எதித்தல்.

C. மருந்து அளித்தல் (Chemotherapy) பல்கிப்பெருகும் புற்றுநோய் கலங்களை இல்லாது செய்யும்.

புற்றுநோயிற்கு அளிக்கப்படும் மேற்கண்ட சிகிச்சையின் சிக்கலால் (Complication) இறப்பது கூடியளவில் உள்ளது.

**குறிப்பு** :- பெண்கள் தங்கள் மார்பகங்களை தங்கள் கையினால் அமுக்கிப்பார்ப்பதன் மூலம் ஏதும் கட்டிகள் இருக்கிறதா என்பதைஅறிந்து வைத்தியரிடம் உடன் சென்றால் நல்லது.

புற்றுநோய்களை ஏற்படுத்தும் தீய பழக்கவழங்கங்களை கைவிடல் மூலம் சில புற்றுநோய்களை குறைத்தும் கொள்ளலாம். எந்த தீய பழக்கமும் இன்றி புற்றுநோய் உங்களை நாடி வந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு காரணம் என்ன?

ஏன் புற்றுநோய்களை 100% குறைக்க முடியாது உள்ளது.

புற்றுநோய்க்குரிய சிகிச்சைகள் சிக்கல்கள் (Complication) நிறைந்து உள்ளது.

இவற்றுக்கு எதிர்கால மருத்துவ உலகமும் ஏன் கடவுள் கூட பதில் அளிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பனே

ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் கதிஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன, போயென்னெ கச்சியேகம்பனே

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவினும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே!

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசார்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நிலைத்தல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டுமென்றே அறிவாரில்லையே

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அதுகாண் நல் மருந்துனக்கே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டுள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையு முண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்தி பகலாய்ச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்தனக்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்!

அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ! தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்

5 - 3 - 1937



மறைவு

7 - 10 - 2011

அமரர்

## தம்பு கந்தையா (சின்னத்துரை)

உள்ளத்தில் உறைந்துவிட்ட உத்தமரே
கள்ளம் இல்லாக் குணம் நிறைந்தவரே
அன்புடன் எம்மை எல்லாம் ஆதரித்தீர்
பண்புகள் கூறி மக்களை பாரினில் உயர வைத்தீர்
இடையிலே எம்மை விட்டு எங்குதான் சென்றீர்
விடைதனைக் கூறாது விரைந்து தான் சென்றீரோ.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால்துயருறும்
இரத்தினசிங்கம், லோகநாதன்,
நகுலன், ராதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு

05

03

1937



உதிர்வு

07

10

2011

கிளிநொச்சி பூநகரி நறவகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் வவுனியா சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## தம்பு கந்தையா

அவர்கள் 07.10.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பு, செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் வசந்தா (ஆசிரியை, பெரிய கோமரசன்குளம் பாடசாலை), சிறிதரன் (டென்மார்க் அகதிகள் பேரவை, கிளிநொச்சி) சிறீகாந்தன், வளர்மதி (லண்டன்), சிறீரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தில்லைநாயகி, கணபதிப்பிள்ளை, சிதம்பரம், காலஞ்சென்ற திசநாதன் மற்றும் இரத்தினசிங்கம், வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வல்லிபுரம், குமாரசாமி (நகரசபை உறுப்பினர், வவுனியா) சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரவீந்திரன், வாசுகி (தாதிய உத்தியோகத்தர் அரசினர் வைத்தியசாலை, வவுனியா), பவானி, கிருஷ்ணகுமார் (லண்டன்), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயன், சாகித்தியன், சத்திகா, சதுசா, கிவிஷன் (லண்டன்), கிஷான் (லண்டன்), கிதுஷா (லண்டன்), பிரித்திகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று 12.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வெளிக்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
மைத்துனர்
தேசமான்ய சுந்தரம் குமாரசாமி (J.P)
நகரசபை உறுப்பினர், சின்னப்புதுக்குளம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 05 | 07 |
| 03 | 10 |
| 1937 | 2011 |



(31, சின்ன புதுக்குளம், வவுனியா)

அமரர்

## திரு. தம்பு கந்தையா

(DRC நிறுவன பணியாளர் க.ஸ்ரீதரன் அவர்களின் தந்தை)

பாழாய்ப் போன காலனின்– கண்பட்டதால்
மண்விட்டு விண் தொட்டீரோ?
எம் மனமெல்லாம் புண்பட்டு
கண்ணீர் விட்டு அழுகிறோம்.
ஆறுதல் சொல்வதற்கு வார்த்தைகள்
– இல்லாமல்
நாமும் ஆறாத்துயரில் தவிக்கிறோம்.
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள்
நினைவுகள் மறைந்து போகாது...

பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

DRC
பணியாளர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 07 |
| 03 | 10 |
| 1937 | 2011 |






கிளிநொச்சி பூநகரி மறவகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் வவுனியா
சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# தம்பு கந்தையா



உதிர்ந்து போகும்வரை தெரியவில்லை
உங்கள் பாசம்
நீங்கள் பேசிய வார்த்தைகளை
சுமந்து வந்து
காற்று காதோரம்
சேர்க்காதா என்று ஏங்குகிறது மனம்
என்ன செய்ய...
எதையுமே நிரப்ப முடியவில்லை
உங்களது வெற்றிடத்தில்
ஐயா
வரலாறாய் வாழ்ந்த உங்களை
வழியனுப்புகிறோம்
கண்ணீரோடு.

*முச்சக்கரவண்டி உரிமையாளர்கள்*

**K.K.** *தரிப்பிடம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்

5 - 3 - 1937



விண்ணில்

7 - 10 - 2011

அமரர்

## தம்பு கந்தையா (சின்னத்துரை)

முழுமுதல் தெய்வமே
இல்லத்தின் வேராக
இல்லறத்தின் விழுதாக
எம்மை தாங்கும் மரமாகி நின்றீர்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய் வாழ்ந்து
வாழ்வில் இணைபிரியாது
எம்மை மண்ணுலகில்
பரிதவிக்கவிட்டு விட்டு
விண்ணுலகம் சென்றீரோ!

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால்துயருறும்:
வேல்முருகன் ஸ்ரோர்ஸ்,
வேல்முருகன் நெற்கபே,
சட்டநாதர் வீதி, நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து இடமறியாது காலமறியாது பலனை எதிர்பாராது வேண்டியபோது மனம் கோணாமல் உதவி செய்து எந்நேரமும் சிரித்த முகத்துடன் உலாவரும் எம் அன்புத் தெய்வம் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து வேண்டிய உதவிகளை மனம் கோணாமல் வழங்கிய உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்றும் எமது இல்லத்தில் இரண்டு நாட்கள் வெற்றுடல் இருந்தவேளை இரவு பகல் பாராது கூழயிருந்து ஆறுதல் கூறியவர்கட்கும் இரங்கல் செய்திகளை வழங்கியவர்கட்கும், தொலைபேசியில் அனுதாபங்களை வழங்கியவர்கட்கும், கண்ணீர் அஞ்சலிகளை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைக்கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது தந்தை திடீரென நோயுற்றபோது ஆறுதல் கூறி உடனிருந்து கவனித்து பல்வேறு உதவிகளையும் வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.





"இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்."
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org